ஓம்
அரி ஓம் நமோ நாராயணா



கோப்பாய்
ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தான பிரதமகுரு

# திருமதி ஆறுமுகம் - இராசம்மா

(சாமி அம்மா)
அவர்களின்

# நினைவு மலர்

28-07-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

அன்புத் தெய்வமே...

எங்கள் குலவிளக்காய் சுடர் ஒளி பரப்பி,
எங்கள் குடும்ப நல்வாழ்வுக்காக அல்லும், பகலும்
பிரார்த்தனை செய்து வாழ வழிகாட்டிய
எமது மதிப்புக்குப் பாத்திரமான காந்தி அம்மாவே!
தாங்கள் காட்டிய அறிவு வழி தவறமாட்டோம்.
எங்கள் இல்லத்தில் உங்கள் அன்பு அழியாது,
நினைவு மறையாது இது உண்மை.
இச் சிறு மலரினை உங்கள் பாத கமலங்களுக்கு
சமர்ப்பிக்கின்றோம்.

— க. தேவராசாவும்
ஞானக் குழந்தைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
அரி ஓம் நமோ நாராயணா




யா / குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும்,

கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தான பிரதம குரு

## திருமதி ஆறுமுகம் - இராசம்மா
(சாமி அம்மா)

அவர்களின்

சிவபதப்பேறெய்தியதைக் குறிக்கும்

# நினைவு மலர்

28 - 07 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி வெண்பா

விஷு வருடம் ஆனிமாத அபரபக்க
அட்டமித்திதி கூடிய வெள்ளிக்கிழமைதனில் - பார்புகழும்
இராசம்மா என்னும் சாமிஅம்மா ஒளிமங்கி
பூதவுடல் நீத்து புகழுடம்பு எய்திய நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் பூர் புவ சுவஹ
தத் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நப்ரசோதயாத்"



# திருமதி ஆறுமுகம் - இராசம்மா
## (சாமி அம்மா)
## அவர்கள்

தோற்றம் 12-03-1919

மறைவு 13-07-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ஆறுமுகம் - இராசம்மா (சாமி அம்மா)

## அவர்களின்

# வாழ்க்கைத் துளி

ஈழத்தின் சிரசாக விளங்கும் யாழ்நகரின் வடபால் குரும்பசிட்டி என்னும் கிராமம் உண்டு. நோய்களைத் தீர்க்கும் முத்துமாரி அம்மன் ஆலயம் இங்குண்டு. அம்மனைக் குலதெய்வமாக வழிபட்டு வந்தவர்கள் வைத்திலிங்கம் - தெய்வானை தம்பதிகள். இவர்கள் செய்த புண்ணியப் பேற்றினால் சீரிய குணம் படைத்த 'இராசம்மா' ஜெனனம் செய்தார். நடராசாவை சகோதரராகக் கிடைக்கப் பெற்றார்.

சிறுவயதிலேயே தெய்வ வழிபாட்டில் நாட்டமுள்ளவர். ஆலயம் செல்லத் தவற மாட்டார். தெய்வத்தின் அருளால் வாக்கு சொல்லும் தத்துவம் கிடைக்கப் பெற்றவர். அன்னாரின் நாவில் ஒலி கணீர், கணீர் என வரும் அது அவருக்கு இறைவன் கொடுத்த கொடை,

பருவமடைந்த இராசம்மாவுக்கு பெற்றோர் திருமணம் செய்ய ஆசைப்பட்டனர். தங்கள் ஏக புத்திரிக்கு அவவூர் ஆறுமுகத்தை மணம் முடித்து வைத்தனர். மனமொத்த தம்பதிகளாக இருவரும் இனிது வாழ்ந்தனர். இறைபணி இருந்ததாலோ, என்னவோ இறைவன் மழலைச் செல்வத்தைக் கொடுக்கவில்லை. இறைவன் அருளால் வீட்டில் சாமி அறையை பூசை அறையாக்கி அடியார்களுக்கு வாக்குச் சொல்லுவார். சிறிது காலத்தின் பின் அன்னாருக்கு வயிற்றில் நோய் ஏற்பட்டு, எந்த மருந்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறவில்லை. ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய பிரதமகுரு வினால் நோய் மாற்றப்பட்டது. குருநாதரால் ஞானோபதேசம் கிடைக்கப் பெற்ற அம்மையார் தன் சொந்த இடத்தை விட்டு, கணவர், தம்பியுடன் கோப்பாயில் வசித்துவந்தார். சக்கராழ்வார் ஆலயத் திற்கு முழுநேர இறைபணி புரிந்தார். ஊர் மக்க ளால் போற்றப்பட்டார். கணவனும், தம்பியும் மரணித்தபின் தேவராசா குடும்பத்தாருடன் இணைந்து கொண்டார். அவர்கள் அன்னாரைக் கண் கலங்கவிடவில்லை.

அன்னார் ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் போர்க் காலச் சூழ்நிலையில் வாழும் மக்களுக்காகவும், நாட் டுக்காகவும் தினம் தோறும் விஷேட ஆராதனை செய்வார்.

பெருவாழ்வு வாழ்ந்த பெருமாட்டிக்கு நோய் ஏற்பட்டது. மருந்து வாங்கிவரச் சென்றபோது மூச்சுத் திணறல் ஏற்பட்டது. காப்பி அருந்தி சிறிது நிமி டத்தில் அன்னாரது ஆவி அமைதியாக சாந்தி அடைந்து விட்டது.

பந்தம் அனைத்தும் நீத்து, 13-07-2001 அபர பக்க அட்டமித் திதியும் ரேவதி நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டமையால் அன்னாரின் ஆத்ம சாந்தியடைய வல்லவனை வேண்டி நிற்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரி ஓம் நமோ நாராயணா.

# தீப ஒளி அணைந்தது

மக்கள் செய்த தவப்பலனால் கோவையூரில் ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் அமரர்களான குருநாதர், சாமி அம்மா, பழனி அப்பா, இரத்தினம்மாள், பாக்கியம், அன்னபூரணம் முறையே பூசை செய்து வழிபாடு செய்து வந்தனர். இவர்களோடு இராசம்மா என்னும் பெண் மணியும் சக்கராழ்வாருக்குப் பூசை செய்து வந்தார்.

இராசம்மா என்னும் பெண்மணிதான் யாவரும் அறிந்த சாமி அம்மா என்பவர். அமரர் அவர்கட்கு தீராத நோய் வயிற்றில் ஏற்பட்டது. வைத்தியர்கள் எவராலும் குணப் படுத்த முடியவில்லை. எங்கள் குருநாதரைப் பற்றி கேள்விப் பட்டு மாயவன் அருளாலும் எங்கள் இல்லம் நாடி வந்து முறையிட்டார். குருநாதருக்கு அன்னாரின் நோயும், அவரை பீடித்திருக்கும் மாய இருளும் புலப்பட்டுவிட்டது போலும். அவரை அரவணைத்து ஸ்ரீமந் நாராயணனின் தீப வணக்கத் தின் மூலம் நோயை அகற்றினார். அம்மையாருக்கு நிம்மதி ஏற்பட்டது அவரின் திருமுகத்தில் தெய்வீக ஒளி வீசுவது கண்டு ஞானோபதேசம் செய்து ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத் திலேயே இறைபணி தொடர ஆசீர்வதித்தார்.

குருநாதர் சமாதியான பின்பு அன்னார் தனது சொந்த ஊரான குரும்பசிட்டியை விட்டு, வீடு, காணியை விட்டு நிரந்தரமாக 1969-ம் ஆண்டு முதல் சக்கராழ்வார் ஆலயத் தில் மடம் அமைத்து அங்கேயே தனது கணவர், சகோதரரு டன் வசித்துவந்தார். இங்கு இருந்தே தம்பதிகள் இருவரும் இறை பணியில் முழுநேரமும் ஈடுபட்டு வந்தனர் கணவர், தம்பி இருவரும் நோய் காரணமாய் இறைவனடி சேர்ந்தனர். அதன்பின் காந்தி அம்மா, சாமி அம்மா, என அழைக்கப்படும் தெய்வத்தாய். எங்கள் குடும்பத்தில் ஒருவராக இணைந்து விட்டார் நாங்கள் செய்த புண்ணியத்தால் அந்த தெய்வத் தாய்க்கு பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்தது. ஒரு வித குறையும் வைக்கவில்லை. நீரழிவு, நெஞ்சு வருத்தம் என அறிந்த நாள் முதல் அவருக்கு ஏற்ற உணவு வகைகளை பக்குவமாய் செய்து கொடுத்தோம். அவரின் குறிப்பறிந்து திருமதி. சுசீலா - தேவராசா பணிபுரிந்து வந்தார். அவரைச் சார்ந்தவர்களுக்கு உண்மை புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் வாழ் நாட்களில் மாயவன் அநேக அற்புதங்களைக் காட்டியுள்ளார். விஷம் தீண்டி காலநேரம் இல்லாமல் ஓடி வருவார்கள், மனம் கோணமல் அரவணைத்து பார்வை பார்த்து, நாமம் இட்டு விஷத்தை இறக்கி விடுவார். தனது வாக்கு வன்மையால் தீராத நோய்களை நீக்கியுள்ளார். தோஷநிவர்த்தி, மனவருத்தம், தொலைந்த பொருட்கள் மீளல் இப்படி எத்தனையோ, எல்லாவற்றையும் நாமம் என்ற மருந்தால் அகற்றியுள்ளார். ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் காந்தி அம்மா, சாமி அம்மா என அழைத்து குறைகளைக் கூறுவார்கள். அவர்களை அணைத்து புன்னகை பூர்த்த முகத்துடன் குறைகளைக் கேட்டு, விசாரித்து, புத்திமதி கூறி எம்பெருமானை மன்றாட்டமாக வேண்டுதல் செய் உன் கஷ்டம், கவலை தீரும் என்று கூறுவதை எங்கள் காதால் கேட்டுள்ளோம்.

கடிகார முள் எப்படி ஒவ்வொரு நாளும் தன் கடமையைச் செய்கின்றதோ அதேபோல் நோய் கஷ்ட உடம்போடும் மழையோ, பனியோ காலையில் ஸ்நானம் செய்து தூய்மையுடன் ஆலயத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு சென்று அங்கு சக்கராழ்வாருக்கு தீப ஒளியேற்றி வணக்கம் தொடங்கி பூசை செய்வார். இறைவன் சன்னிதானத்தில் உயர்வு, தாழ்வு பார்ப்பது இல்லை. எல்லோரையும் அரவணைத்து குறைகளை தீர்த்து வைக்கும் எங்கள் 'சக்கரநாயகி' என்றுதான் இவரைக் கூறவேண்டும்.

காந்தி அம்மா என்னும் தெய்வம் எங்கள் இல்லத்திற்கு ஒளி தந்த ஜோதி. எங்கள் சந்தானமே உங்களுக்குத் தலை வணங்குகின்றது. மெழுகுவர்த்தி எப்படி ஒளியைக் கொடுத்து இறுதியில் அணைகிறதோ அதேபோல் எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காய் விளங்கிய சுடர் ஒளி அணைந்துவிட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பரந்தாமனைப் பிரார்த்போமாக.

என்றும் நினைவில் இருக்கும்
திரு. திருமதி. தேவராசா குடும்பம்
திரு. திருமதி. கெங்காதரன் குடும்பம்

## தேற்றம்

முடிசார்ந்த மன்னரும் ஒருபிடி சாம்பராவர் - என்ற
படிசார்ந்த உண்மையினை மனதில் பதித்து - இது
குடிசார்ந்த இவ்வுலகின் நியமமென - இறைவன்
அடிசார்ந்து அமைவோம் - உளமே தேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா!

வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்த என் அம்மாவே !
கூழாவடியில் குடிகொண்ட கண்ணகிவாழ் குரும்பசிட்டியில்
ஊழ்வினையின் பயனாய் வந்தவதரித்த என் அம்மாவே !
பாழாய்ப்போன பாரில் பாவத்துடன் பிறந்த பாவியரின்
மீளாத்துயர் துடைக்க வந்துதித்த என் அம்மாவே !
கார்முகில் கண்ணனின் கழலடிதன்னைக் கட்டிப்பிடித்து
பார்புகழும் வாக்குப் பகர்ந்து பரவசமூட்டிய என் அம்மாவே !
சீர்பெறு கண்ணன் கோயில் பேர்பெறு கோயிலாக்கி
நாரியர் நலம்பெற வரமது உவந்தளித்த என் அம்மாவே !
மிடியினால் பிடியுண்ட படியிலாப் பெண்டிரும்
மடியினால் மடிப்பிச்சைதனை எடுக்கச் செய்த என் அம்மாவே !
கொடிய நோயினால் அல்லலுறும் மக்களின் நோயை
விடியுமுன் குணமடையச் செய்த என் அம்மாவே !
பாவங்களை வேட்டையாடும் வேட்டைத் திருவிழாவில்
வெண்ணையதனையுண்ட மாயக் கண்ணன்போல்
விண்ணினில் துள்ளியெழுந்து தன்னைமறந்து உருவாடி
மண்ணவர்க்கு வாக்களித்த என் அம்மாவே !
நின் பூதவுடல் அழிந்தாலும் நின் புகழுடல் அழியாது
நின் ஆவியும் கண்ணன் பாதங்களைச் சேர்ந்து
கண்ணபிரான் பக்தர்களை நின் கண்களால் கண்காணித்து
நீவிரும் மனச் சாந்தியடையக் கண்ணன் திருவடிகளை
யாவரும் என்றென்றும் வணங்குவோமாக.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

— மா. சிறீகாந்தன்
கோப்பாய் வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயல்

அன்னை காந்தி அவர்களுக்கு மனைவியாக வாய்த்தவர் கஸ்தூரிபாய் அம்மையார். கணவனே கண்கண்ட தெய்வமென எண்ணி வாழ்ந்தவர். மாதர் குல மாணிக்கமென அவர் திகழ்ந்தமையால் அன்னை கஸ்தூரிபாய் என்று உலகத்தால் அழைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியூர் காந்தி அப்பா (ஆறுமுகம்) அவர்களுக்கு மனைவியாக வாய்த்தவர் இராசம்மா அவர்கள். திருமதி. இராசம்மா ஆறுமுகம் அம்மையார் தம் நற்குணம் நற்செயல்கள் மூலம் ''சாமியம்மா'' என்ற சிறப்பைப் பெற்றார். நாற்குணமும் நாற்படையெனக்கொண்ட மதிப் பார்ந்த சாமியம்மாவை நமது நாட்டுக்கு கஸ்தூரிபாய் என்றால் அது மிகையாகாது.

இடம் பெயர்ந்த நிலையில் மெத்த முன்னமே கோப்பாய்ப் பகுதியை வாசஸ்தலமாகக் கொண்ட ஆறுமுகம் இராசம்மா தம்பதியினர் சக்கராழ்வாருக்கே ஆளானார்கள் திரு. ஆறுமுகம் அவர்கள் இயற்கை எய்தினார். கைம்மை எய்திய நிலையிலும் திருமதி ஆறுமுகம் இராசம்மா அவர்கள் கண்ணன் காட்டிய வழியில் ஒழுகியதுடன் அடியார்களுக்கும் அவ்வழியினைக் காட்டி மகிழ்ந்தார்.

ஏழைகள், பணக்காரர்கள், படித்தவர்கள், படியாதவர் கள் என்ற பேதம் இன்றி கிருஷ்ணர் சந்நிதியில் அடியார்கள் அனைவரையும் அரவணைத்தே வாழ்ந்தார். சாமியம்மா அவர் களது பூசை. வழிபாடுகள் அடியார்கள் கிருஷ்ண பரமாத்மா வுக்கு மீளா அடிமைகளாக வழி செய்தன.

ஊருக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாக, நமக்கெல்லாம் பெற்ற தாயாக வாழ்ந்து வந்தவரான திருமதி. இராசம்மா (சாமியம்மா) அம்மையார் எல்லாம்வல்ல சக்கராழ்வாரின் திருவடிகளைச் சென்றடைந்ததில் வியப்பேதுமில்லை. அவன் அருளாலே அவன்தான் வணங்கிய சாமியம்மா அவர்கள் அவ னுக்கே ஆளாகிவிட்டார், எல்லாம் அவன் செயல்.

எமது அன்புக்கும் பாசத்திற்கும் உரிய சாமியம்மா அவர் களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி யது அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத் தின் ஒளிச்சுடராய் வாழ்ந்து மறைந்த எம் அன்புத்தெய்வமே!

ஞானவைரவர் வீதி, — ச. கனகராசா குடும்பம்
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகாசமாய் ஒளிவீசிய சுடர் அணைந்துவிட்டது !

மிக நெருக்கமானவர்களை, நாம் மதிப்பவர்களை, நமக்கும் மண்ணுக்கும் வேண்டப்படுபவர்களை இழக்கின்றபோது நெஞ்சம் துடிக்கவே செய்கின்றது. 13-07-2001 அன்று வெள்ளிக்கிழமை நாராயணன் பாதாரவித்தங்களை அடைந்த திருமதி. ஆறுமுகம் - இராசம்மா ( சாமி அம்மா ) அவர்கள் ''அம்மா'' என்று எல்லோராலும் அன்போடும் ஆசையோடும் மரியாதையோடும் அழைக்கப்பட்டு வந்தவர். இவர் வடகோவை சக்கர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாகச் சேவை செய்த காலம் ஆலய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனின் மிகையாகாது.

இவரிடம் காணப்பட்ட மனித நேயப் பண்புகளான அன்பு, கருணை, இரக்கம், ஈகை, பொறுமை என்பனவற்றுடன் வெள்ளையுள்ளமும் கொண்டவர். கண்ணன் திருவருளைப்பெற நாடி, ஓடி, தேடி வருபவர்களுக்கெல்லாம் கலங்கரை விளக்காக நின்று பேரொளி காட்டியவர். இவருடைய பூசை முறைகள் பக்தர்களை பக்தி வெள்ளத்தில் மூழ்கிச்செய்யும். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம்போல் வழிபாட்டில் கலந்து கொள்ளும் அடியார்கள் கூட்டம் அம்மா எவ்வாறு வழிபாடு செய்கின்றாரோ அதே பாவனையாக தாங்களும் செய்யும் போது மனம் நெகிழாதவர் உள்ளங்களும் நெகிழும். கண்ணன் மேல் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும். தேனினும் இனிய தமிழ் மொழியால் பிரார்த்தனைகளைச் செய்தும், அமுதத் தமிழ்மொழியால் திருமண வைபவங்களை நடாத்தும் பாங்கும் மிகமிக அற்புதமானவை.

இவரை ஒரு சுமைதாங்கி எனக் கூறுவது மிகப்பொருத்தமானது. அடியவர்கள் தங்கள் மன அழுத்தங்களை, துன்ப துயரங்களை, ஆற்ற முடியாத வேதனைகளை அருள்மிகு சக்கராழ்வாரிடம் முறையிட வரும்போது அம்மா அவர்கள் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து அரவணைத்து ஆறுதல் கூறும் முறை வேறெங்கும் காண முடியாது.

தீராத பிணிகளுடன் வருபவர்களுக்கும், திருமணம் வேண்டிவரும் கன்னியர்களுக்கும், மழலைச் செல்வம் கிடைக்காத மணமக்களுக்கும், வெளிநாடு செல்லச் சென்று இடையில் சிக்கித் தவிப்பவர்களுக்கும், குடும்பப் பிரிவு ஏற்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டாற்றில் விடப்பட்டவர்களுக்கும் ஆறுதல் வார்த்தை கூறு வதுடன் நேர்த்திகள் செய்வித்து அவரவர் வேண்டுதல்களைக் கண்ணனிடம் கூறி வேண்டும் வரம்பெறத் துணையாக இருப் பார்.

சிறியவர்கள், பெரியவர், ஏழை, பணக்காரன், படித்த வர்கள், பாமரர்கள், ஆண், பெண் என்ற பாகுபாடு காட் டாது அனைவரும் கண்ணன் மெய்யடியார்கள் என எண்ணு பவர்.

கண்ணன் திருத் தலத்திற்கு வரும் அடியார்கள் அனை வரும் அம்மாவின் திருவாய் மொழியைக் கேட்பதற்கும், அம் மாவின் கையினால் திருநாமத்தைப் போடுவித்துச் செல்வதற் கும் நேரம் காலம் பாராது நின்று, திருநாமத்தைப் போட்ட வுடன் மன நிறைவோடு செல்வர்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ''வாக்கு'' சொல் வதைக் கேற்பதற்கு பல்வேறு இடங்களிலும் இருந்து வருகை தந்து, பணிவுடன் இருந்து கேட்டுப் பலன் அடைந்தவர் பலர். இவருடைய செயற்பாடுகளை வார்த்தைகளினாலோ, பேனா முனைகளினாலோ அளவிட்டுக் கூறமுடியாது அடியார்களின் உள்ளங்களை எல்லாம் காந்தம் இரும்பைக் கவர்வதுபோன்று தன்பால் ஈர்த்துக்கொண்டவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய் வத்துள் ஒருவராகிவிட்டார். இறவாத புகழுடன் சக்கராழ்வா ருடன் இரண்டறக் கலந்துவிட்டார். இவர் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

— சி. துரைராசா
ஓய்வுபெற்ற ஆசிரியர்,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உருவம்
# எளிமையின் சின்னம்

காந்தி அம்மா அவர்கள் எல்லோருடனும் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்ளும் பண்பும், அவரின் புன்முறுவல் பூத்த முகமும் எனது கண்முன்னே என்றும் நிலைத்து நிற்கின்றது. அந்தக் கண்ணனடியார் மறைந்தார் என்று சொல்லாமல் அருட்பேறு பெற்றார் என்றால் அது சாலவும் பொருந்தும். என்னையெல்லாம் அன்புடனும். கருணையுடனும் வாழ்த்துக் கூறி துன்பம் போக்கி வைத்த எனது அன்புத் தெய்வம் இன்று இல்லை.

இத்தனை வயது முதிர்ந்த போதும், உடல்நிலை தளர்ந்த போதும் இறைவனின் தொண்டுகளைப் பணி புரிந்து தொண்டாற்றினார். என்னுடன் கலந்துரையாடிக்கொண்டிருக்கும் பொழுது "ஒருவருக்கும் கஷ்டம் கொடுக்காமல் கண்ணன் என்னை எடுத்துவிட வேண்டும்" என்று சொல்லுவார். "உங்களுக்கு ஏனம்மா கவலை, கண்ணன் அருளால் தேவண்ணர் குடும்பத்துடன் நீங்கள் இருக்கின்றபடியால் எல்லாம் நல்ல படியாக நடக்கும்" என்று கூறுவேன். எனவே அவ்வாறான தெய்வம் இன்று எம்முன் இல்லை என்று நினைக்க சோகம் தாழவில்லை.

அத்தகைய தெய்வம் சக்கராழ்வாரின் பாதாரவிந்தங்களைச் சென்றடையும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

— திருமதி சந்திராதேவி - தங்கராசா
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கோர் பாட்டி

விபரம் அறிந்த நாள் முதலாய்
பாட்டி, பாட்டி என்று அழைப்போமே
அருகில் வந்து எம்மை அணைத்து
முத்தம் பல தந்திடுவீர்.

நோய் நொடி எம்மை அணுகாமல்
நாமம் இட்டு பார்வை பார்த்திடுவீர்
பாட்டி இனிப் பார்வை பார்ப்பது யாரோ?
உங்களைப் போல் ஒரு பாட்டி கிடைப்பாரோ?

அப்பா அம்மா அடித்துவிட்டால்
அன்பாய் எமை அழைத்து
அறிவுரை பல தந்திடுவீர்
பாலர் நாங்கள் படுத்த இடத்தைப் பார்க்கின்றோம்.

காந்தி அம்மா, காந்தி அம்மா என
ஆலயம் வருவோர் அழைப்பார்கள்
அந்த ஒலி கேட்பதெப்போ?
நீங்கள் கண்ணன் திருவடி சேர்ந்தீரோ.

அம்மப்பா, அம்மா, மம்மா உங்களை
மீண்டு எடுக்க வேண்டும் என்று
பிரார்த்தனைகள் பல செய்தனரே
பக்குவமாய் பரந்தாமன் கழலடி சேர்ந்தீரோ.

என்றும் மறவாத பேரப்பிள்ளைகள்
— வைஷ்ணவி,
ஆதித்தியன்,
வித்தகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு உருவான "சாமியம்மா" இன் சொல்லால் கவர்ந்த தாயாளே!

## திருமதி ஆறுமுகம் - இராசம்மா அவர்கள்

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த குரும்பசிட்டிக் கிராமத்தில் உதித்த பெரியவர்களில் திருமதி ஆறுமுகம் - இராசம்மா அவர்களும் ஒருவர். எமதூர் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வெள்ளி தோறும் வருகைதந்து அம்மையை அகத்தில் வைத்து அடியவர்களுக்கு அருள்வாக்குக் கொடுத்து வந்தவர். பின்னர் குரும்பசிட்டி - மாயெழு ஒழுங்கையில் தமது சொந்த இல்லத்தில் சாமி அறையிலே பூசைசெய்து பஞ்சாரத்தி தீப ஒளியேற்றி, வந்த அனைவரையும் வணங்கவைத்து - தம் குறைதீர வந்தவர்கள் அம்மையாரிடம் அருள்வாக்குப் பெற்றுச் சென்றார்கள். அந்தக் காலப் பகுதியில் கோப்பாயில் ஸ்ரீ சக்கராழ்வார் (கிருஷ்ணர்) ஆலயத்திற்கும் வந்து செல்வது அவரின் வழக்கம். காலப் போக்கில் தன்னுடைய இல்லத்தில் இருந்து செய்த பூசைப் பணியை கண்ணன் ஆலயத்தில் செய்ய அமர்ந்துகொண்டார்.

குரும்பசிட்டி மண்ணில் உதித்தவர்களுக்கு உரித்தான பொதுப்பணி, ஆலயப்பணி இவைகளில் முதன்மை பெற்றவர்களில் ''சாமி அம்மா''வும் ஒருவராவர். நாராயணனுடைய பாதங்களுக்கு மலர் போட்டு, தீப ஒளியேற்றி நாராயணன் அருள் பெற்ற அம்மையார். ஆலயத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் அனைவரையும் அன்போடு அழைத்து ஒவ்வொருவராக என்ன குறை? என்ன தேவை? என்று தாயே உள்ளத்தால் அறிந்து அதற்கேற்ற பரிகாரங்களை வழங்கி உதவிய அந்தத் தாய், எம்மெல்லோர் கண்களிலும் நிலையாக நிற்கின்றார். எளிமையாக வாழ்ந்தவர்.

நல்லதொரு விளக்காக நாடி வந்தவர்க்கெல்லாம் அருள் ஒளியாக ஞானியாக தெய்வமாக வாழ்ந்த சாமியம்மா நம்மிடமிருந்து விலகவில்லை, என்றும் எம் அருகே இருக்கின்றார். ஆண்டுகள் ஐம்பதுக்கு மேல் அருள்வாக்கு வழங்கி எமது மக்கள் படும் துயரம் துன்பங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து அவர்களின் அன்னையாக வாழ்ந்த தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் இருக்கப் பயம் என்ன? உங்கள் தேவை என்ன? எதுவானாலும் நான் செய்கிறேன். துன்பம் வராது நான் பார்த்துக் கொள்வேன்'' எனத் தேற்றிய அந்த மொழிகள் எம் காதுகளில் ஒலிக்கின்றன. எல்லோரையும் தம் பிள்ளைகளாக நேசித்த அந்தத் தாயார் கண்ணனின் இணையடியின்கீழ் 13-07-2001ல் சேர்ந்தாலும் அவர் நினைவுகள் எம் மத்தியில் நீக்கமற நிறைந்திருக்கும்.

— கோ. சிவசுந்தரமூர்த்தி
ஒய்வுபெற்ற உள்ளூராட்சி எழுதுவினையர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்க உபதலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வடகோவையை வதிவிடமாகவும் கொண்ட

# திருமதி ஆறுமுகம் - இராசம்மா

## (சாமி அம்மா)

*1940-ம் ஆண்டு காலப் பகுதியில் வடகோவையைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவர் கொழும்பில் பிரபல வியாபாரியாயிருந்தார். இந்தியாவிலிருந்து வந்த நாராயண குரு இராமலிங்கம் வீட்டில் தங்கும் பாக்கியம் கிடைத்தது. 1942-ம் ஆண்டு இரண்டாவது உலக மகா யுத்தகால இடப்பெயர்வின் போது நாராயண குருவும் இராமலிங்கம் அவர்களுடன் வந்து இவ்விடம் தவசிநிலை கொண்டார்.*

*குரு ஒரு அருளாளர். வாக்குச் சித்தியுடையவர். தமிழில் அர்ச்சனை செய்து, கூட்டுப் பிரார்த்தனை என்பன நடத்தினார். தன் நாவினால் பாடினார் சிஷ்யர் கூட்டம் பெருகியது. சக்கராழ்வாருக்கு ஆலயம் அமைக்க திருவருள் கைகூடியது.*

*வடகோவை கொழுவிய கலட்டியில் நன்கொடைக் காணியில் வேண்டியன யாவும் சிஷ்யர், பக்தர் கூட்டத்தினால் செய்யப்பட்டு நிறுவப்பட்ட ஆலயத்தில் மூலஸ்தானத்தில் சக்கராழ்வார் ஸ்தாபித்து, எம்பெருமான் ஜோதியைத் தீபத்தில் ஏற்றி அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகின. பூஜை காலங்களில் வழிபடுவோர் கூட்டம் பெருகியது.*

*தமிழில் அர்ச்சனை, கூட்டுப் பிரார்த்தனை, பக்தர்களுக்கு சாமியாரினால் நாமம் இடுதல் என்பன தொடர்ந்தன. பக்தர்கள் யாவரும் தாமாகவே முன்வந்து ஆலய திருப்பணி வேலைகள் யாவற்றையும் செய்து பூரண பொலிவுபெற்ற ஆலயமாக்கினர். ஆலயத்தில் திருமண வைபவங்களும், பிரதி மாதந்தோறும் அன்னதானமும் நடைபெறுகின்றன. காவல் தெய்வமாகிய விஷ்ணுவுக்கு யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களுண்டாயினும் இவ்வாலயத்தில் தமிழில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனை முக்கியம் பெறுகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட பூஜைக் காலங்களில் அயல் கிராமங்களிலிருந்து பக்தர்கள் கூட்டம் திரண்டிருக்கும். ஆவணித் திருவோண நட்சத்திரத்தையொட்டி 11 நாட்கள் விசேட திருவிழா. 10-ம் நாள் தயிர் முட்டியடித்தல் சீனடி, சிலம்படி, தீப்பந்தம் ஆகிய திருவிளையாடல்கள் நடைபெறும். நாராயண குரு 1969-ம் ஆண்டு சமாதியடைந்ததும் அவரது சிஷ்யர் ஐயம்பிள்ளைச் சாமியார் பூஜாகாரியங்களைத் தொடர்ந்து நடத்தினார் பின்னர் திருமதி ஆறுமுகம் - இராசம்மா ( சாமி அம்மா ) பூஜை காரியங்களைத் தொடர்ந்து நடத்தினார். இவரது அருள் நோக்கும் பக்தியுள்ளமும் வழிபடுவோரின் பெருமதிப்பைப் பெற வழிவகுத்தது. இவரை யாவரும் "சாமியம்மா" என்றே அன்புடன் அழைத்தனர்.

மற்றைய ஆலயங்களில் பூசகர் வடமொழி சுலோகங்களைச் சொல்லி பூஜை காரியங்களைச் செய்வர். இவ்விடம் யாவும் தமிழில் நடப்பதால் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வதால் பக்திமயம் கூடிக் காணப்படும்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தில் உறைவர் - என்கிறது புராணம்

சிறந்த பக்தியுள்ளம் கொண்ட சாமியம்மா என்று எல்லோரினாலும் அழைக்கப்படும் திருமதி ஆறுமுகம் - இராசம்மா அவர்கள் சக்கராயுதப் பெருமான் திருவடிகளை அடைவார். மேலும் வழிபடும் அடியவர்களுக்கு அருள்மழை பொழியும் என்பது உறுதி. சாமியம்மாவின் ஆன்மா சாந்தி பெற நாமும் பிரார்த்திப்போம்.

சக்கராயுதப் பெருமான் அடியவன்
— க. இ. குமாரசாமி
கோப்பாய் மத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ கிருஷ்ண கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மாபர்ம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்!
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக் காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப் பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியை கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே தருக
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாய் பொருளே அலையாய் வருக
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
கர்மசந் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேச இயலான் சரணம்
கீதாச்சாரிய கிருஷ்ணா சரணம்
வேதாச்சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தா சிறியேன் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோத குமார அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுக ளில்லை
என்னை விட்டொரு இனியவ னில்லை
நம்மை விட்டொரு நண்பர் களில்லை
நன்மையில் உன்போல் நாயக னில்லை
எங்கெங் கேநான் இருந்திடும் போதும்
அங்கங் கேநீ அருள்செய்ய வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவன் சத்தின் நாயகன் வருக
யதுவம் சத்தின் யாதவன் வருக
மதுவை வென்ற மாதவன் வருக
மலைக்குடி கொண்ட மாலவன் வருக
திருப்பதி யாளும் திருமால் வருக
திருவரங் கத்துப் பெருமாள் வருக
வல்லிபுர மாயவனே வருக
வண்ணைப்பதி வெங்கடேஸ்வர பெருமாளே வருக
பொன்னாலை பதி கிருஷ்ண பகவானே வருக
தெகிவளைப்பதி மகா விஷ்ணுமூர்த்தி வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய்; துன்பம்
இரா வணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக் கைவலி தருக!
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவர் தம்மைக் களத்தில் வென்றாய்
கௌரவம் காக்கக் கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கென உன்னச் சேரித்துப் பிடித்தேன்
பகிகென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவ னேநீ தயவுடன் அருள்க !
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று
உன்னால் தானே உலகம் இயக்கம்
கண்ணனி லாமல் கடல்வான் ஏது
கண்ணனி லாமல் கடவுளு மில்லை
கண்ணனி லாமல் கவிதையு மில்லை
கண்ணனி லாமல் காலமு மில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிக ளிலைநீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க !
பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் வாமல்
இன்னும் இன்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியு மிலாமல்
தொற்று நோய்கள் பற்றி விடாமல்
முதுமை துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்
சிந்தனை கெட்டு திறமையும் கெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

இந்த மாற்றம் உலக நியதியாகும்!

~ ஸ்ரீ கிருஷ்ண பகவான் ~

NG.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்